என்பதை நிச்சயமாக உறுப்பினர் அவர்கள் புரிந்து கொண்டிருப்பார்கள். அவர்களது பாராட்டுதல்களை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

கரடிக்குப்பம் கிராமத்திலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையம்.

*வினா எண். 822 திரு.—சி. கோபால் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பரா—

(அ) வடாற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், கரடிக்குப்பம் கிராமத்தில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தில் தனி மருத்துவர் இல்லாதது உண்மையா ?

(ஆ) இந்த சுகாதார நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்றும் உத்தேசம் அரசின் பரிசிலனையில் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: (அ) இல்லை. வட ஆற்காடு மாவட்டம், வாலாசா வட்டம், கரடிக்குப்பம் கிராமத்தில் ஆரம்ப சுகாதார நிலையம் கிடையாது. அங்கு ஓர் அரசினர் மருந்தகம் தான் உள்ளது.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோபால் : என் தொகுதியில் உள்ள கரடிக்குப்பம் கிராமத்தில் உள்ள மருந்தகத்தில் ஏறக்குறைய நாள்தோறும் 200-க்கு மேற்பட்ட நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். அந்நிலையில் அங்கே முழுநேரம் இருந்து கவனித்துக்கொள்ள ஒரு மருத்துவர் அங்கே இல்லை என்ற காரணத்தால் மக்கள் வசதி கருதி உடனடியாக அங்கே ஒரு மருத்துவரை நியமிக்க அரசு ஆவன செய்யுமா ?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே : மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கக்கூடிய அந்தக் கருத்து எந்தளவிற்கு உண்மை என்றால் அந்த மருந்தகத்திற்கு ஏற்கனவே டாக்டர் நியமித்திருந்தோம். டாக்டர் ஜே. ரவிச்சந்திரன் என்பவரை 1—7—1980-ல் நியமித்தோம். பிறகு அவர்கள் அங்கே சரியான வகையில் பணியாற்றவில்லை என்பதால் டாக்டர் பி. எஸ். மனோகரனை நியமித்தோம். அவர்களுக்கு

பி. ஜி. பதவி கிடைத்தது. இப்போது ஆறு மாதங்களாக எம்.ஜெயபால் அஸிஸ்டென்ட் சர்ஜனாக பணியாற்றிக் கொண்டு வருகிறார். 22—8—80-இல் இருந்து பணியாற்றிக்கொண்டு வருகிறா, அந்த மருந்தகத்திற்கு எப்படி நல்லவகையில்வேண்டிய நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளலாம் என்பது குறித்து அரசாங்கம் நிச்சயமாகக் கவனிக்கும்

திரு. சி. கோபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ஜெயபால் தற்போது அந்த மருத்துவ மனையில் காலை 9 மணி முதல் 12 வரையிலும், அதற்குமேலே பிற்பகல் 3 மணி முதல் 5 மணி வரையிலும்தான் அங்கே பணியாற்றுகின்றார். ஆகவே, உடனடியாக அங்கே தனி மருத்துவர் ஒருவரை மக்கள் நலம் கருதி நியமிப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகின்றேன்?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத் தான் நான் முதலிலேயே சொன்னேன். நிச்சயமாக நியமிப்போம்.

எல்லா அரசுத் தலைமை மருத்துவ மனைகளிலும் பல் மருத்துவப் பிரிவு ஏற்படுத்தும் திட்டம்.

* வினா எண். 823—திரு. து. புருஷோத்தமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

எல்லா அரசுத் தலைமை மருத்துவ மனைகளிலும் பல் மருத்துவத்துக்கென்று தனிப் பிரிவு உள்ளதா?

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: பல் மருத்துவத்திற்காகத் தனிப் பிரிவுகள் இப்பொழுது தமிழ்நாட்டில் உள்ள எல்லா மாவட்ட மருத்துவ மனைகளிலும் செயல்பட்டு வருகின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த பல் மருத்துவம் மாவட்ட தலைமை மருத்துவ மனைகளில் செயல்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அதைப் போல எல்லா தாலுகா தலைமை மருத்துவ மனைகளிலும் செயல்படுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வீர்களா? ஏற்கெனவே, சில தாலுகாக்களிலே இருப்பதாக அறிகிறேன். அப்படியில்லாமல், எல்லா தாலுகா மருத்துவ மனைகளிலும் செயல்படுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்?